குறிப்பிடுகின்ற கிராமச் சாலைத் திட்டம் என்பது ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற மண் சாலைகளை, கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்து, மேம்படுத்தி, தார் சாலைகளாகப் போட்டு அவற்றை பாாமரிப்பதாகும். 1991-1996-ல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய காலத்தில் இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மண் சாலைகளாக இருந்த சாலைகளை கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்து, தார் சாலைகளாக மாற்றி அவற்றை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்து பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் 1997-ல் இருந்து கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்படி மேம்பாடு செய்யப்பட்ட கிராமச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருக்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் விளைவாக இன்றுவரை அந்தச் சாலைகள் மேம்படுத்தப்படாத, பழுதுபார்க்கப்படாத, அதாவது மண் சாலையாக இருந்து தார் சாலையாக மாற்றப்பட்ட சாலைகள் பழுதுகூட பார்க்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் எதிலும் சாராத அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.50 கோடி ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

123—

சட்டக் கல்லூரி

•19431—திருமதி காசாம்பு பூமாலை:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் நடப்பு நிதியாண்டில் அரசு சட்டக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2003 மார்ச் 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பற்றியும், மனித உரிமை பற்றியும், விழிப்புணர்வு அதிகம் உள்ளதால் பல இளைஞர்கள் சட்டம் படிக்க முன் வருகின்றனர். விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்கள் சட்டம் படிக்க ஏதுவாக அரசு சட்டக் கல்லூரி ஒன்றினை அடுத்த நிதியாண்டிலாவது சங்கராபுரத்தில் நிறுவ ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் படிக்க வேண்டும் என்கின்ற அந்த விழிப்புணர்வு காரணமாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 20 ஆயிரத்திலிருந்து 22 ஆயிரம் வரையில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. எனவே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மொத்தம் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 562 இடங்கள் சென்னையிலே இருக்கின்ற, சட்டக் கல்லூரியிலே இருக்கின்ற 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் பட்டப் படிப்புக்குரிய இடங்களை மற்ற கல்லூரிகளுக்குக் கொடுத்த நிலையிலே School of Excellence மற்றும் சென்னையில் உள்ள அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை upgrade செய்ததன், காரணமாக 80+40=120 இடங்களை அதிகமான அளவுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சங்கராபுரத்திலே சட்டக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்வதற்குக் காரணம் இந்திய வழக்கறிஞர்கள் மன்ற விதிமுறைகளின்படி, மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரியைத் தொடங்க முடியும். எனவே, அந்த இடத்தில் மாவட்ட நீதிமன்றம் இல்லாத ஒரு சூழ்நிலையில் அங்கே சட்டக் கல்லூரி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் சட்டக் கல்லூரி அமைக்க முடியாத சூழ்நிலையில் தனியார், சட்டக் கல்லூரியை அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சேலத்திலே ஒரு தனியார் சட்டக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டுள்ளது. சேலத்திலே இயங்குகின்ற அந்த சட்டக் கல்லூரி மீதுகூட சில புகார்கள் இருக்கின்ற காரணத்தால் உடனடியாக மேற்கொண்டு மற்ற இடங்களில் தனியார் சட்டக் கல்லூரிகள் தொடங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை. அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெற்று அந்தக் கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த வழக்கின் மீதான தீர்ப்பு தற்போது பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 124, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

124—

வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம்

***25503—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கான இடத்தில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS